Registered as a Newspaper

பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 02

செவ்வாய்க்கிழமை
28 நவம்பர் 2023

கார்த்திகை 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



மின்னுவதெல்லாம் பொன்னல்ல எண்டுற மாதிரித்தான் உந்தத் துவாரகா விசயமும் கண்டியளோ...

போரின் பின்னர் முன்னெப்போதும் இல்லாத வகையில்

# துயிலும் இல்லங்களில் மக்கள் வெள்ளம்

## கல்லறைமேனியரை கண்ணீரால் பூசித்தனர்

## தாயகம் எங்கும் சுடர் விட்டன தீபங்கள்



யாழ்ப்பாணம், நவம்பர் 28

தமிழீழ தனியரசு அமைப்பதற்காக வீரச்சாவடைந்த வீரமறவர்கள் நினைவாக, மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்று இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் நெஞ்சை நெகிழ வைப்பனவாக அமைந்தன. தாயகக் கனவோடு சாவினைத் தழுவிய சந்தனப்பேழைகளின் - மாவீரர்களின் - பெற்றோர், உற்றார்கள், உரித்துடையோர்கள், களமாடிய தோழர்கள் எனப்பலரும் திரண்டு கண்ணீர் சிந்தி அஞ்சலித்தனர்.

11

## ஐந்தாவது பொலிஸ் அலுவலரையும் கைது செய்ய நீதிமன்றம் பணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

சித்தன்கேணி இளைஞன் கொலை வழக்கில் சாட்சியத்தின் அடிப்படையில் 5 பொலிஸார் அடையாளம் காணப்பட்டாலும் 4 பேரே கைது செய்யப்பட்டுள்ளனர். ஐந்தாவது பொலிஸ் அலுவலரை ஏன் கைது செய்யவில்லை என்று நீதிமன்றில் கேள்வி எழுப்பப்பட்டது.

இளைஞன் கொலை வழக்கில், உயிரிழந்த இளைஞனின் சகோதரன், தந்தை, இளைஞனை

11

## பொலிஸாரின் கடைசிமுயற்சியும் கைகூடவில்லை

யாழ்ப்பாணம், நவ. 28

மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடை செய்யக் கோரி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நீதிவான் நீதிமன்றங்களில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்றுத் திங்கட்கிழமை நிராகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதிவான்

11

## மாவீரர் நாளில் மட்டக்களப்பில் பொலிஸார் பெரும் அடாவடி

4 பேர் கைது

மட்டக்களப்பு, நவ. 28

மட்டக்களப்பு கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்ல செயற்பாட்டுக் குழுவின் உறுப்பினரான நிதர்சன் உட்பட 4 பேர் நேற்று மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். நினைவேந்தல் நிகழ்வுக்காக ஈகச்சுடர் ஏற்றுவதற்காக மாவீரர்களின் உறவுகள் காத்திருந்தவேளை

11

## பேராதனை பல்கலையிலும் மாவீரர் நாள் சுடரேற்றப்பட்டது

கண்டி, நவ. 28

பேரதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களால் மாவீரர் நாள் நினைவேந்தல் நேற்று உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. (அ-ஒ-இ)

## விளையாட்டுத்துறை அமைச்சு ரொஷானிடமிருந்து பறிப்பு



கொழும்பு, நவ. 28

சிறிலங்கா கிரிக்கெட் சபை நிர்வாகத்தைக் கடுமையாக விமர்சித்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் அரசியல் சமரில் ஈடுபட்ட ரொஷான் ரணசிங்கவை, அமைச்சரவையில் இருந்து அதிரடியாக நீக்கியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் விளையாட்டு, இளைஞர் விவகாரங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு பதவிகளில் இருந்து ரொஷான் ரணசிங்கவை நீக்கியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் ரொஷான் ரணசிங்க, நேற்று

11

மாவீரர் நாளில்

## துவாரகா எனக் கூறும் பெண்ணின் உரை

இந்திய ஊடகங்களே முக்கியத்துவம்

யாழ்ப்பாணம், நவ. 28

மாவீரர் நாளான நேற்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகா எனக் குறிப்பிடும் பெண் ஒருவர் ஆற்றியுள்ள கொள்கைப் பிரகடன உரை சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது. மாவீரர் நாளில் பிரபாகரனின் மகள் துவாரகா, யூடியூப் காணொலி ஊடாக கொள்கைப் பிரகடன உரையாற்றுவார் என சமூக ஊடகங்களின் வழி தகவல்கள் வெளி

11

பிரபாகரனின் ஒளிப்படம் வெளியீடு:

## உதயன் ஆசிரியரிடம் ரி.ஐ.டி. விசாரணை

யாழ்ப்பாணம், நவ. 28

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் தொடர்பான செய்தியை வெளியிட்டமைக்காக 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் த.பிரபாகரன் மாவீரர் தினமான நேற்றுப் பயங்கரவாதத்

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


மன்னார் - ஆட்காட்டிவெளி (ஓ-56)



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ்., மார்டின் வீதி


காரைநகர் (ஓ.125)


நல்லூர் மாவீரர் நினைவு மண்டபம் (ஓ.இ)


கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் (ஓ.27)


தேராவில் (ஓ.113)


வவுனியா பல்கலைக்கழகம் (ஓ.18)


பருத்தித்துறை சுப்பர்மடம் (ஓ.100)


உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லம் (ஓ.100)


மன்னார் பண்டிவிரிச்சான் (ஓ.56)


வடமராட்சி மாலை சந்தை (ஓ.100)


வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் (ஓ.100)


முல்லை., களிக்காடு மாவீரர் துயிலும் இல்லம். (ஓ.110)


ஈச்சங்குளம் மாவீரர்துயிலும் இல்லம். (ஓ.110)


சாட்டி மாவீரர் துயிலும் இல்லம் (ஓ.27)


இரணைப்பாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 5 ஆயிரம் பேர் பணிநீக்கம்!

கொழும்பு, நவ.28

**மின்சாரசபையின் செலவுகளை நிர்வகிக்கும் வகையில் 5 ஆயிரம் நிரந்தர ஊழியர்கள் நீக்கப்பட்டுள்ளனர் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் காலத்தில் அத்தியாவசியமானோரை மாத்திரம் பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு அடுத்த வருடம் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்ட 25 வீத சம்பள அதிகரிப்பு மற்றும் கொடுப்பனவுகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (எ-இ)

## துர்நாற்றம்

சாவகச்சேரி நவ. 28

சாவகச்சேரி பெரிய அரசடி தாமோதரம்பிள்ளை வீதியில் இரவு வேளைகளில் இனந்தெரியாதோரால் கொட்டப்படும் கழிவுப் பொருள்களிலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆயினும் இது தொடர்பாகத் தங்களுக்கு முறைப்பாடு வரவில்லை என்று சாவகச்சேரி நகரசபை தெரிவித்தது. வாரத்தில் ஒருநாள் வட்டார கழிவகற்றல் திட்டத்தின் ஊடாக இந்த வீதியிலும் கழிவகற்றப்படுகின்றது என்றும் நகரசபை தெரிவித்துள்ளது. (ரி-9)

## மனு தள்ளுபடி

கொழும்பு, நவ.28

க.பொ.த. உயர்தரப் பரீட்சையை பிற்போட வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

நாலந்தா கல்லூரி மாணவர் ஒருவரும், ஸ்ரீமாவோ பாலிக வித்தியாலய மாணவர் ஒருவருமாக இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. வழக்காளர்களில் ஒருவர் வழக்கை மீளப் பெற்றுள்ள நிலையில், ஒரு வழக்கு நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. (எ-6)



## யானையின் சடலம் வவுனியாவில் மீட்பு!

வவுனியா, நவ. 28

வவுனியா பன்றிக்கெய்தகுளம் பகுதியில் யானை ஒன்றின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

பன்றிக்கெய்தகுளம் பகுதியில் உள்ள காணியொன்றில் யானையின் சடலம் ஒன்று இருப்பது அவதானிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், வன உயிரிகள் திணைக்களத்துக்குத் தகவல் வழங்கியதையடுத்து சடலம் தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. மூன்று நாள்களுக்கு முன்னரே யானை உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. (ம-110)



தமிழீழ விடுதலைப்புலிகளின் முதல் மாவீரர் லெப்டினனட் சங்கர் என அழைக்கப்படும் செல்வச்சந்திரன் சத்தியநாதனுக்கு மாவீரர் நாளான நேற்று வல்வெட்டித்துறையில் ஈகைச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவீரர் பண்டிதரின் தாய், வட மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினர் க.சதீஸ் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.
இதேவேளை நெல்லியடி மத்திய கல்லூரிக்கு முன்பாக முதல் கரும்புலி கப்டன் மில்லர் நினைவாகவும், கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும், நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திலும் சிவாஜிலிங்கம் சுடரேற்றி அஞ்சலித்தார். (எ-இ-20-66-100)

## புதினம் தெரியுமோ?

நேற்று எங்களுக்காக தங்களை கொடுத்தவையளை சனம் உணர்ச்சிபூர்வமாக அஞ்சலிச்சினம். அதுசம்பந்தமான விசயம் ஒண்டப் பற்றித்தான் இப்ப சொல்லப்போறன்.

அவையள் இருக்ககேக்க தலைவர் இந்தத் தினத்தில பேசுவார். அவர் பேசிறதக் கேக்கிறதுக்கு தமிழ்ச் சனம் மட்டுமில்லை, இந்த உலகமே எதிர்பார்த்திருக்கும். எல்லாம் மௌனிச்ச பிறகு மாவீரர்நாள் அஞ்சலிகள் அவரிண்ட உரை இல்லாமத்தான் நடந்து வருது.

இந்தமுறை அதிலதான் ஒரு குழப்பம் நடந்திருக்கு. தலைவரிண்ட மகள் துவாரகா இந்தமுறை மாவீரர் தினத்தில உரையாற்றுவார் என்று ஒரு மாதத்துக்கு முன்னரே அரசல் புரசலா கதையள் வந்திருந்தது. அதைப்போல தலைவருடைய மகள் எண்டு ஒராள் நேற்று உரையாற்றியிருக்கிறா. தலைவருடைய மகள் வாரது சனத்துக்கு மகிழ்ச்சிதான். ஆனால் நேற்று நடந்த சம்பவம் சனத்துக்கு குழப்பத்தான் உண்டுபண்ணியிருக்கு.

தலைவருடைய மகள் உரையாற்றுவா என்று கதையள் வரேக்கயே குழப்பங்களும் ஆரம்பிச்சிட்டுது. கொஞ்சப்பேர் உண்மை எண்டும், கொஞ்சப்பேர் பொய் எண்டும் கன்ன பிரிச்சுக் கதைக்க சனத்துக்கும் ஒரே குழப்பம். இந்த உரையை ஏற்பாடு செய்த ஆக்களோ தாங்கள் யார் எண்டு கூடச் சொல்லேல. அதுதான் குழப்பத்திண்ட உச்சம் கண்டியளே.

வெளிநாட்டில இருக்கிற சிலர் இப்பிடித் திட்டம் போட்டு செய்திருக்கலாம் எண்டும் சனத்துக்கு சந்தேகம். தலையும் இல்லாம வாலும் இல்லாம திடீரெண்டு ஒராளக் கொண்டந்து பேசவிட்டா சனம் குழம்புந்தானே. இந்த விசயங்களச் செய்யிறவ அத ஒழுங்காச் செய்யாம குட்டையைக் குழப்பி விடுற வேலையத்தான் செய்யினம். உந்த விசயங்களிண்ட தார்பரியம் தெரியாம செய்து சிக்கலை இடியப்பச் சிக்கலாக்கி விடக்கூடாது பாருங்கோ.

இத ஏற்பாடு செய்தவை மறைஞ்சு கொண்டு இதுகளைச் செய்யாம சனத்துக்கு சரியான விளக்கத்தைக் கொடுக்கோணும். இல்லாட்டி நாளைக்கு இப்பிடி ஒவ்வொருத்தரும் ஒவ்வொண்டச் சொல்ல சனம் எதையும் நம்பாத நிலைமைதான் வரும். இருக்கிற பிரச்சினைகளுக்க இனியொரு புதுப் பிரச்சினை சனத்துக்கு வேண்டாம் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## பனம் கிழங்குக்கு சந்தையில் மவுசு

யாழ்ப்பாணம், நவ. 28

பனங்கிழங்குக்கு யாழ்ப்பாணச் சந்தைகளில் கடும் மவுசு ஏற்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக சந்தைகளில் பனங்கிழங்கைக் காணக்கிடைப்பதில்லை. இந்த நிலையில், கடந்த ஓரிரு நாள்களாக பருவகாலத்துக்கு அப்பாற்பட்ட விதைப்பாகிய பனங்கிழங்குகள் சந்தைக்குக் கொண்டுவரப்படுகின்றன. ஒரு கிழங்கு 15 முதல் 20 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. (ம-100)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கடந்த 2 நாள்களாக குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல், குழப்பங்கள் விலகும். சோர்வு நீங்கி துடிப்புடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத இடத்தில் பணம் வரும். நட்பு வட்டம் விரியும்.

**இடபம்:** இராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் உங்களைச் சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் வேலையாள்களிடம் தட்டிக்கொடுத்து வேலை வாங்குவது நல்லது.

**மிதுனம்:** உணர்ச்சி வேகத்தில் அவசர முடிவுகள் எடுக்கவேண்டாம். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள்.

**கடகம்:** இராஜதந்திரமாக சில முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழிநடத்துவீர்கள். உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**கன்னி:** கணவன் – மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். நீண்ட நாளாகத் தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். உறவினர்களின் ஆதரவு பெறுவீர்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள்.

**துலாம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். குடும்பத்தில் ஒருவரை ஒருவர் மாற்றி குறை கூறிக் கொண்டிருக்கவேண்டாம்.

**விருச்சிகம்:** உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதரர்கள் வகையில் ஒற்றுமை பிறக்கும். விலை உயர்ந்த பொருள்களை வாங்குவீர்கள்.

**தனுசு:** பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர்கள், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும்.

**மகரம்:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** எதிர்ப்புகள் அடங்கும். நீண்ட நாள்களாக தள்ளிப் போனகாரியங்கள் முடியும். பணப்பற்றாக்குறை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**மீனம்:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சகோதரர்களால் பயனடைவீர்கள். மனைவி வழியில் பலன் உண்டு. உங்கள் பிள்ளைகள் உங்கள் பேச்சைக் கேட்பார்கள்.

# வடக்கிலிருந்து 7 பேர் தமிழகத்தில் தஞ்சம்!

**சென்னை, நவ.28**

**இலங்கையில் இருந்து படகு மூலம் தமிழகத்துக்கு ஏழு பேர் தஞ்சம் கோரிச் சென்றுள்ளனர்.**

யாழ்ப்பாணம், சுழிபுரத்தைச் சேர்ந்த இவர்கள் ஏழு பேரும் ஒரே குடும்ப உறுப்பினர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் மன்னார் சென்று அங்கிருந்து படகுமூலம் தமிழகத்தின் தனுஷ்கோடியைச் சென்றடைந்துள்ளனர் என்பது முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவர்களைக் கைது செய்த தமிழகக் கடலோரக் காவல் படை, அவர்களை மண்டபம் அகதி முகாமுக்கு அனுப்பியுள்ளது என்று இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

## கலாசாரப் பெருவிழா

கிளிநொச்சி நவ.28

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசாரப் பெருவிழா கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் அடுத்தமாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மாகாணத்தில் கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட புதிய நூல்களில் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த இருவரின் நூல்கள் இந்த வருடப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அறிவியல் நூல் போட்டியில் மிருசுவில் எழுத்தாளர் ஆ. ஜென்சன் றொனால்ட் (கவிஞர் சூரியநிலா) எழுதிய என் சுவாசமே எனும் நூலும், சிறுவர் இலக்கியப் போட்டியில் கவிஞர் செ.சுதாகரன் வயலூரான் எழுதிய சிறுவர் பாடல் எனும் நூலும் விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ரி-9)

## கலந்துரையாடல்

கல்லுண்டாய் ஜே/136 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட நவாலி தெற்கு கண்டல் தாவரப் பகுதிகளை ஒதுக்கப்பட்ட வனமாக அறிவிப்பதற்காக வனவளங்கள் பாதுகாப்புத் திணைக்களம் முன்மொழிவுகளை வெளியிட்டுள்ளது.

அது தொடர்பாக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தின் நிலைப்பாட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கான கலந்துரையாடல் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலாளர் திருமதி.யசோதா உதயகுமார் தலைமையில் இடம்பெற்றது. (ரி-66)

## சங்கக் கிளைக் கூட்டங்கள்

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 2ஆம்திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. சங்கத்தின் 16 கிளை நிலையங்களுக்கும் மு.ப.10மணிக்கு ஒரே சமயத்தில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இந்தக் கூட்டம் நடைபெறும் என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச-17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### ஜெயபத்மினி யோகராஜா

(பேபி அக்கா)

திதி: பிரதமை



எம் ஆருயிர் அன்னையே!
ஓர் ஆண்டு ஓடி மறைந்தாலும்
அனுதினமும் நீங்கள் அருகில் இருப்பதை
- உணருகின்றோம்
உருவமாய் இல்லை என்றாலும்
தெய்வமாய் எங்களுடன் இருந்து ஆசிபுரியுங்கள்.

அன்னையின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

சோடா கொம்பனி ஒழுங்கை, மல்லாகம். குடும்பத்தினர்

மண்ணில் 19.09.1949 விண்ணில் 09.12.2022

## மரண அறிவித்தல்

### திருமதி தேவமனோகரன் பத்மலோசனி

(ஓய்வுபெற்ற ஆசிரியை, நவாலி மகா வித்தியாலயம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்)

தோற்றம்:09.12.1956 மறைவு:27.11.2023



நவாலி கிழக்கு முருகமூர்த்தி கோவில் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவமனோகரன் பத்மலோசனி அவர்கள் நேற்று (27.11.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் மார்க்கண்டு செல்வரத்தினம் தம்பதியரின் புத்திரியும், காலஞ்சென்ற இ. தேவமனோகரன் (புகைப்பட தொழில்நுட்பவியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், மீனலோசனி (ஓய்வுபெற்ற ஆசிரியை), ஸ்ரீஸ்கந்தராஜா (தொழில்நுட்பவியலாளர்), கமலாதேவி, குணதாசன் (லண்டன்), அமிர்தகௌரி (ஜேர்மனி), நிர்மலாதேவி (ஓய்வுபெற்ற உபதபாலதிபர்), அரவிந்தகுமார் (தொழில்நுட்பவியலாளர்), பானுகோபன் (பாறின்), கமலலோசனி (ஆசிரியை, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வர்களான விஜயராணி, சரவணபவன், ஸ்ரீசெந்தில்நாதன் மற்றும் ராதா, தவமணி தேவி, மாலா, அரியநேசன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 958 6304, 076 026 9017

(CS 27114)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பெரும்பாவம் பொல்லாதது


கடந்த மூன்று வருடங்களில் அண்ணளவாக 2 ஆயிரத்து 400 மாணவர்கள் பிரபல பாடசாலைகளில் சட்டத்துக்குப் புறம்பாகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வெளிப்படுத்தியிருக்கின்றார். 2020ஆம் ஆண்டு தொடக்கம் இடைப்பட்ட இரண்டரை வருடங் களில், மாணவர்களை 'சட்டவிரோதமாக' இணைப்பது தொடர்பான சுமார் 3 ஆயிரத்து 300 கடிதங்கள் கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டுள்ளன என்றும் இந்தக் கடிதங்களில் 70 வீதமானவற்றுக்கும் மேற்பட்டவை ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமையவே வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்பதான தொனிப்பொருளில் கிராமங்கள்தோறும் உள்ள பாடசாலைகளை வலுப்படுத்தும் திட்டமொன்று இலங்கை அரசால் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் நடைமுறைப் படுத்தப்பட்டது. அந்தத்திட்டம் இப்போதும் உயிர்ப்புடன் இருக்கவே செய்கின்றது. கிராமங்களில் உள்ள பாடசாலைகள், மாணவர்கள் வருகையின்மையால் மூடப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் கல்வித்துறையின் 'கிராமக் கட்டமைப்பை' வலுப்படுத்தவும், மாணவர்களின் இடைவிலகலை இல்லாமலாக்கி அவர்களை பாடசாலைகளை நோக்கி அழைத்துச் செல்லவும் இந்த 'அயற் பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற திட்டம் காலத்தேவையானதாகவே இருந்தது. இன்னும் சொல்லப்போனால், இலங்கை அரசாங்கத்தால் அண்மைக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒருசில சிறந்த திட்டங்களில் இதுவும் ஒன்றே. ஆனால், எந்தத் திட்டமும் இதயசுத்தியுடனான செயற்பாடுகள் இல்லாவிட்டால் வெற்றிபெறாது.

வேலியே பயிரை மேய்வது இலங்கைக்குப் புதிதல்ல. இதுவே இப்போது கல்விக் கட்டமைப்பிலும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. கிராமங்கள் தோறும் உள்ள பாடசாலைகளைப் பலப்படுத்த வேண்டும், இலங் கையில் இலவசக் கல்வி அனைவரையும் 'சீரான' முறையில் சென்றடையவேண்டும் என வாய்ச்சவடால் விட்டுக் கொண்டு, பிரபல பாடசாலைகளில் 'சட்டவிரோத இணைப்புகளுக்காக' கடிதங்களை வழங்குவதென்பது, 'படிப்பது தேவாரம், இடிப்பது சிவன்கோவில்' என்பதான செயலன்றி வேறென்ன?

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பணம் படைத்தவர்கள் மட்டும் இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று பல பாடசாலைகளில் சட்டவிரோதமான மாணவ இணைப்புகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பது கசப்பான உண்மையே. அதிலும் மருத்துவர்கள், பொறியியலாளர்கள் என கற்றறிந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களே இந்தப் பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றமை அவதானிக்கப் பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலைகளில் ஒரு மாணவனை அல்லது மாணவியைச் சேர்க்கவேண்டுமாயின், அந்தப் பாடசாலைகளுக்கு அருகில் குறைந்தது ஐந்து வருடமேனும் வசித்திருக்கவேண்டும் என்ற நிபந்தனை பின்பற்றப்படுகின்றது. இந்த நிபந்தனை கற்றறிந்த சமூகத்தவர்களால் மிகச் சாதாரணமாக மீறப்படுகின்றது. சட்டத்தரணிகள் மூலம், அல்லது கிராம அலுவலர் மூலம் 'போலியான' உறுதிப்படுத்தல்களைப் பெற்று (ஐந்து வருடம் அந்தப் பகுதியில் வசிக்கின்றார்கள் என) இந்த இணைப்பை அவர்கள் சாத்தியப்படுத்திக் கொள்கின்றனர். இதற்குச் சில சட்டத்தரணிகள், கிராம அலுவலர்கள் உடந்தையாக இருக்கின்றனர்.

இங்கே இவர்கள் சட்டத்தின் பார்வையில் இருந்து பிடியிலிருந்து தப்பிக்கொள்கின்றனர். ஆனால் சட்டம் அனைத்து விடயத்திலும் தீர்ப்பிடாது. சட்டத்துக்கும் அப்பாற்பட்ட தீர்ப்புத்தான் பல இடங்களில் வலியதாக இருக்கின்றது. இந்தப் போலி இணைப்பின்மூலம் ஒரு குழந்தை கல்வியைப் பெறுகின்றது என்றால் அதில் எந்தப் பிரச்சினையும் யாருக்கும் இல்லை. ஆனால், சேர்க்கப்பட்ட குழந்தைக்குப் பதிலாக, நியாயமாக தனக்குக் கிடைத்திருக்க வேண்டிய இடத்தைப் பிறிதொரு குழந்தை இழக்கின்றது. இதுவே இங்கு விடயம். இந்தப் பெரும்பாவம் பொல்லாதது என்றுகொல்லும்.




# அனைத்துக் கிராமங்களும் தொழில் முயற்சிக் கிராமம்



**கொழும்பு, நவ.28**

**ஒவ்வொரு கிராமத்தையும் தொழில் முயற்சிக் கிராமமாக அபிவிருத்தி செய்வதன்மூலம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

தேவையான வசதிகளை வழங்குவதற்காக விவசாய நவீனமயமாக்கல் சேவை நிலையங்களை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயம் செய்யும் மக்களுக்கு இலவச காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவது என்பது அவர்களது முன்னோர்களின் பாரம்பரியத்தை வழங்குவதாகவே இருக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ-இ)

## விரைவில் பெறுபேறு

கொழும்பு. நவ.28

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தரவுத் தளத்தில் பதிவேற்றப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தரவுகள் சரிபார்க்கப்பட்ட பின்னர் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் என்று பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வி அமைச்சின் தகவல்களின்படி பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட ஆகக்குறைந்தது இரு வாரங்களேனும் தேவை என்று அறியமுடிகின்றது. (எ-இ)

## இலங்கைக்கு 300 மில். டொலர்

கொழும்பு. நவ.28

இலங்கைக்கு டிசெம்பர் மாதம் மேலதிகமாக 300 மில்லியன் டொலர் நிதி உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவே இந்த நிதியை வழங்கவுள்ளன.

சர்வதேச நாணயநிதியம் இலங்கைக்கு இரண்டாம் கட்ட நிதியை வழங்கிய பின்னர் இந்த உதவி கிடைக்கும் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

## ரணிலுக்கு புகழாரம்!

கொழும்பு. நவ.28

கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருந்த இக்கட்டான சூழ்நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய திறமை ஜனாதிபதிக்கு உள்ளது. அதனாலேயே நாம் அவருக்கு ஆதரவு வழங்கினோம். அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாட்டுக்காக சிந்தித்துத் தீர்மானங்களை எடுக்கவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## நாளை

29.11.2023

**புதன்கிழமை**

கார்த்திகை 13

சுபநேரம் : 04.43 - 06.13

ராகுகாலம் : 12.13 - 01.43

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023

"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வறட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை."

- ஜோன் முர் -

(அமெரிக்க இயற்கையியலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல் - 2023

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை,
## புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வட மாகாணம்

1. சபை நிதி ஒதுக்கீட்டின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டத்திற்காக பயன்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

2. **தலைவர். பிரதேசசபை பெறுகைக்குழு. புதுக்குடியிருப்பு பிரதேசசபை** கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருள் விநியோகத்தரிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.

3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர். பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு (தொலைபேசி: 021 229 1024 e.mail – pkipsmullai@gmail.com )** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 28.11.2023 தொடக்கம் 12.12.2023 வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணி வரை வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர். பிரதேசசபை பெறுகைக்குழு. புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 28.10.2023 ஆம் திகதியிலிருந்து 12.12.2023 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 3000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

6. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர். பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை. புதுக்குடியிருப்பு** எனும் முகவரிக்கு 12.12.2023 ம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.

7. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 45 (26.01.2024) நாட்கள் வரை செல்லுபடியாகும்.

8. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை வங்கிப் பிணையாக மாத்திரம் செலுத்த முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டு தொகை (மில் ரு) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(04)/Coun/Bike/2023 | அலுவலக பாவனைக்கான இரு உந்துருளி கொள்வனவு (ஆண்களுக்கானது) | சபை நிதி | 1.2 | 15 நாட்கள் | வட மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் | 12,000.00 | 23.02.2024 |

9. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ. மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை.**
**புதுக்குடியிருப்பு.**
28.11.2023

## சந்தில் சிந்துபாட ஐ.ம.கட்சி திட்டம்

2024 ஏப்ரல் மாதத்துக்குள் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கான 'அரசியல் போரை' முன்னெடுப்பதற்கான வியூகங்களை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வகுத்து வருகின்றது எனத் தெரியவருகின்றது.

வரி விதிப்புகள், பொருள்களின் விலையேற்றம் என்பவற்றால் மக்கள் அரசுமீது அதிருப்தியில் உள்ள நிலையில், விரைவில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால் அது தமக்குச் சாதகமாக அமையும் என ஐக்கிய மக்கள் சக்தி கருதுகின்றது. (எ-44)

## வேட்பாளர் யார்? திணறும் பெரமுன

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் களமிறங்குவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தநிலையில் தனது ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக ஸ்ரீலங்கா பெரமுனக் கட்சி முடிவெடுக்கமுடியாது திணறி வருகின்றது. அதனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பது தொடர்பாக அந்தக் கட்சி தீவிரமாக ஆலோசித்து வருகின்றது என்று கட்சித் தகவல்கள் கூறுகின்றன. (எ-இ)


**உற்பத்தி முகாமையாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் அரிசியாலை ஒன்றிற்கு உற்பத்தி முகாமையாளர் தேவை.
**உணவு தங்குமிடம் இலவசம்**
**076 096 9728, 076 096 9734**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தாயின் அரவணைப்பில்
05 . 05 . 1939



கந்தன் திருவடியில்
25 . 11 . 2023

### இராமுப்பிள்ளை ஆறுமுகம்

இணுவில் கந்தசுவாமி கோவில் ஸ்தாபகர் குழந்தையர் வேலாயுதர் வழித் தோன்றலும் ஆலயத்தின் பரம்பரை ஆதீன கர்த்தா இராமுப்பிள்ளை ஆறுமுகம் கடந்த (25.11.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை செல்லாபரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அபிராமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், தர்சினி (கனடா), சிவப்பிரியா (லண்டன்), இராமகீர்த்தன் (கீர்த்தனர் ஸ்ரோஸ் - இணுவில்), ரஜீவன் (கிராம சேவையாளர்- பிரதேச செயலகம் உடுவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இராசநாயம், வேலாயுதபிள்ளை, மகாலிங்கம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற திருமகள் மற்றும் கைலாயநாதன், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் செல்வநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெகதீஸ்வரன் (கனடா), சுசிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காவியா, துஷா, சஹானா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2023) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27108) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
27 - 02 - 1953



மறைவு
25 - 11 - 2023

### நாகலிங்கம் இராசலிங்கம் (டாளி)

**(ஓய்வுநிலை வருமான மேற்பார்வையாளர், யாழ் மாநகர சபை)**

உடுவில் உதயசூரியன் வீதியை பிறப்பிடமாகவும், இல.10A, றக்கா லேன், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இராசலிங்கம் (டாளி) (ஓய்வுநிலை வருமான மேற்பார்வையாளர், யாழ் மாநகர சபை) அவர்கள் கடந்த (25.11.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் லூசியா தம்பதிகளின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்பு கணவரும், ரெலிமாக்கஸ் (கனடா), பிரிந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நட்தாஷா (கனடா), கவிசாந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் றியான், சாதன்யா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் கனகேஸ்வரி, விக்னேஸ்வரி, கருணசீலன் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் - நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்), இராஜன் (ஓய்வுநிலை தொலைபேசி இயக்குனர் - யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மாலினி, மகேந்திரன் (கனடா), எல்மோ (மனோ, லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.11.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு றக்கா வீதியில் அமைந்துள்ள புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**10A, றக்கா லேன்,**
**யாழ்ப்பாணம்**

**தகவல்: குடும்பத்தினர்**
**076 724 0044**

(CS 27094)(K-1)

# கண்ணீர் அஞ்சலி

எமது அன்பு நண்பி திருமதி செந்தியா ஜதீசன் அவர்களின் பாசமிகு அம்மா

## திருமதி றாகினி தவேந்திரன் (ஓய்வு நிலை அசிரியை)



24.11.2023 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு என்ன செய்து மனத்தை தேற்றுவது என்று அறியாமல் துடித்து நிற்கின்றோம்.

கங்காரு தேசம் வாழ் உம் மகவின்
உறவுகள் எம்மைக் கண்டால்
கன்னத்தில் கை வைத்துக் கனிவாகப் பேசும்
உம் கள்ளமற்ற மனதை யமனறியானோ?
காலனவன் கையசைக்கும் கணம் தெரிந்தோ
எமைக் கடைசியாகக் கண்ட போது கட்டியணைத்துச் சென்றீர்!

அன்பால் எமையணைத்து- எம்
அனைவருக்கும் அன்னையானீர்....
இன்பமுடன் துள்ளித்திரியும்
இளமைமிகு தாயாய்- எம்
நெஞ்சங்களில் நிறைந்தீர்.....
நம்பமுடியா வெற்றிடத்தை
நானிலத்தில் தந்திட்டீர்- உம்
அருமை மகவை ஆற்ற வழி புரியவில்லை.....
ஆண்டவன் அடியில் அமைதியாய் உறங்குமம்மா......

ஈர விழிகளுடன்
மகவின் Brisbane வாழ் உறவுகள்....

அன்னாரின் பிரிவால் வாடித் துடிக்கும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தோற்றம்**
**07.11.1955**

**மறைவு**
**24.11.2023**

**பிறிஸ்பேன் வாழ் நண்பர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியாத நினைவலைகள்

முதலாம் ஆண்டு | 17ஆம் ஆண்டு





**குகநாதன் - புஸ்பகாந்தி** (தவம் அன்ரி)

தோற்றம் 19.10.1947 — மறைவு 08.12.2022

**செல்லத்துரை - குகநாதன்** (தவம்)

தோற்றம் 04.04.1944 — மறைவு 10.12.2006

திதி: பிரதமை

அன்பினால், பண்பினால், நட்பினால், ஆளுமையினால் எங்கள் அனைவரது உள்ளங்களில் குடியிருக்கும் எங்கள் அன்பு தாய், தந்தையே என்றென்றும் உங்களை நினைத்திருப்போம். உங்கள் ஆத்மா சாந்தியடைய செல்வ நாக பூஷணி அம்பாள் இறைபாதம் சரணடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

108, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

cs 27096 (AK.1)

# மரண அறிவித்தலும் தசாக ஹ்ருகயக்ஞ அழைப்பும்

தோற்றம் 05.08.1936 — மறைவு 20.11.2023



அச்சுவேலி பத்தமேனி மிட்டிலாங்கூடல் பிள்ளையார் கோவில் முன்னாள் பிரதமகுரு மூ.சிவசுப்ரமணியசர்மா அவர்களின் துணைவி

## சிவசுப்ரமணியசர்மா விமலாதேவி

அவர்கள் 20.11.2023 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியசர்மாவின் அன்பு மனைவியும் கமலாதேவி, ஜெயபாலசர்மா, சுலோஜனா தேவி,பத்மாதேவி,சிவபாலசர்மா,ஜெயதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் குமாரசதாசிவசர்மா, செண்பகவல்லி, சுவாமிநாத சர்மா, கமலராஜசர்மா, மீனலோஜனி, மோகனகிருஸ்ணசர்மா ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலரூபன் நித்தியா, திவாகரன் கௌசி, சிந்துஜா முரளிதரன்,சுமனஜா கௌரீசன், சிவாத்மஜன் நிலானி, சக்திதரன் கீர்த்தி, பிரவினா சனாதனன், தரனிகா விதுசன், ஸ்ரீகரன்,ஹரினி, ஸ்ரீவத்ஸன் மனஸ்வினி,விஷ்வாதிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் அபிநயன், ஹர்சிதா, பிரித்வி, அதிதி, ஜஸ்வினி, ஸ்ரீவிஸ்வத், ஹார்னி, மகனியா, தந்திரி, நிவேதித் ஆகியோரின் பூட்டியுமாவார். அன்னாரின் இறுதி கிரியைகள் 20.11.2023 அன்று பிற்பகல் கைலாசபிள்ளையார் கோவிலடியில் உள்ள அன்னாரின் மகனின் இல்லத்தில் நடைபெற்றது.

ஏனைய அனைத்து கிரியைகளும் கைலாசபிள்ளையார் கோவிலடியிலுள்ள அன்னாரின் மகனின் இல்லத்தில் **(95 கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்)** நடைபெறும் என்பதை உற்றார். உறவினர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்

**அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் இடம்பெறும்.**

- **29.11.2023 - தசாகம் - புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு**
- **30.11.2023 - ஏகோதிஷ்டம், மாசிகம் - வியாழக்கிழமை**
- **01.12.2023 - சபிண்டீகரணம் - வெள்ளிக்கிழமை**
- **02.12.2023 - ஹ்ருகயக்ஞ சமாராதனை - சனிக்கிழமை**

02.12.2023 அன்று நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

தொடர்புகளுக்கு: **ஜெயபாலசர்மா** - 077 643 3670
**சிவபாலசர்மா** - 077 394 9359

(cs.27110) (N.1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 • 11 • 1955



மறைவு 24 • 11 • 2023

## திருமதி றாகினி தவேந்திரன்

(ஓய்வு நிலை ஆசிரியை)

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி றாகினி தவேந்திரன் அவர்கள் கடந்த (24.11.2023) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான தங்கவடிவேல் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், தவேந்திரன் (ஓய்வு நிலை ஆசிரியர், யா/மீசாலை வீரசிங்கம் ம.கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், செந்தியா, றஜீதன், தனீஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜதீஷன், றஜீதா ஆகியோரின் மாமியாரும், தருண், ஆரவ், ஸ்ரீனிகா, மேதவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மாலினி, சுபாசினி, நளாயினி, உதயகுமார், சிறீதரன், பிரபாகரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், சுரேந்திரன், மகேந்திரன், சியாமளாதேவி, இந்திராதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மீசாலை வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"உதய தாரகை"
மீசாலை மேற்கு,
மீசாலை
077 910 3340

த.தவேந்திரன் (கணவர்)
பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்

CR 41236 (S-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 • 12 • 1990



மறைவு 27 • 11 • 2023

## இராமக்கிருஸ்ணன் றதீசன்

கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமக்கிருஸ்ணன் றதீசன் அவர்கள் 27.11.2023 காலமானார்

அன்னார் இராமக்கிருஸ்ணன் குஞ்சுமணி தம்பதியரின் ஏகபுத்திரன் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (28.11.2023) மதியம் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
076 562 6215

CR 41244

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி நாகேஸ்வரி சண்முகசுந்தரம்பிள்ளை



காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் கருவேலடி லேன், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி சண்முகசுந்தரம்பிள்ளை நேற்று (27.11.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் தங்கமுத்து தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையாபிள்ளை அன்னம்மா தம்பதியரின் மருமகளும், சண்முகசுந்தரம்பிள்ளையின் பாசமிகு மனைவியும், தவமணிதேவியின் அன்புச் சகோதரியும், சண்முகதாசன் (ராசன் - லக்ஷன் றேடர்ஸ்), சிவதாசன் (லண்டன்), சிறிதாசன் (சிறி - மல்லாவி), சண்முகராணி, நாகராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்சினி, ராதா (லண்டன்), சரஸ்வதி, தவராசா, பூபாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஸலச்சனா, டிலக்சன், கிஷாயினி, ரிசிபன், சபிதா (லண்டன்), மதுசன், நிதுர்சன், நிதுஷா, கஜானா, கஸ்மிதன், கபிலன், றூபிகா, கஜனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 18.05.1949 — மறைவு 27.11.2023

No.6, கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
ராசன் - 077 959 5142
சிறி - 077 181 0097


(cs.27105) (N.1)

---

"ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ"

## 31வது நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை வீட்டுக் கிருத்திய அழைப்பு

உதயம் 16 . 12 . 1950



அஸ்தமனம் 30 . 10 . 2023

கடந்த (30.10.2023) அன்று சிவபதமடைந்த எமது அன்பு அப்பா

**அமரர் கிருஷ்ணபிள்ளை வசந்தராஜா**
**(அப்பு மாமா)**

அவர்களது சிவபதப்பேறு குறித்த, 31வது நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், வீட்டுக்கிருத்தியமும், நாளை (29.11.2023) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பரகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுவதுடன், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

சாரதா வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.


குடும்பத்தினர்.

(CR 41252) S-1

---

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 03 . 09 . 1950



ஆண்டவன் அடியில் 27 . 11 . 2023

## இராசையா இராஜேஸ்வரன்

(உரிமையாளர்- இராசையா கிறேசர்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இராஜேஸ்வரன் அவர்கள் நேற்று (27.11.2023) திங்கட்கிழமை காலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா மகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சந்திரவதனா அவர்களின் பாசமிகு கணவரும், இராஜேஸ்வரி, கேதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சஞ்சீபன் (விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையம் - விவசாயத் திணைக்களம்), காயத்திரி (ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி அலுவலகம்), இரஜீவன் (Dialog Axiata - Colombo), சுஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்சினி (இலங்கை விவசாயக் கல்லூரி- பரந்தன்), குமரன் (ஆசிரியர்- யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்), அனுத்திகா (Gapstars Pvt Ltd- Colombo) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரணவி, யதுணவி, கஜோரிகா, கிஜானிகா, ஆருத்ரன், ஆத்வீகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில், இருபாலை வீதி,
கோப்பாய் தெற்கு.
தொடர்புகளுக்கு:- 0777777131

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 41251) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




அகில இலங்கை சமாதான நீதவானாக உயர்
நீதிமன்றத்தில் 13.11.2023 சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட
சைவப்புலவர்

## திரு. செல்லையா பரமேஸ்வரன்

(அதிபர், ஏழாலை ஸ்ரீ முருகன் பாடசாலை)

அவர்களை வாழ்த்துகிறோம். அவரின் சமூக சேவை தொடர எல்லாம் வல்ல கும்பிளாவளை பிள்ளையார் அருள் புரிவாராக

வாழ்த்துவோர்:
**செல்லையா கந்தசாமி**
**(ஓய்வுநிலை மக்கள் வங்கி முகாமையாளர்)**
**கந்தசாமி லீலாதேவி**

## கரைத்துறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு.

## கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு சொந்தமான கடைகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்வி மனு கோரல் அறிவித்தல்

முள்ளியவளை பொதுச்சந்தைக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்த் தளத்திலான கடைத்தொகுதி வாடகைக்கு விடுவதற்கான கேள்வி மனுப் பத்திரங்கள் கரைத்துறைப்பற்று பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பவர்களிடமிருந்து 28.11.2023 ஆம் திகதி முதல் 15.12.2023 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை கரைத்துறைப்பற்று பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் விநியோகிக்கப்படும். அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதி நிதியோ சமூகமளித்து கேள்வி மனுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை, கிராம சேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அத்துடன் குடும்ப அட்டை ஆகியவற்றின் மூலப்பிரதியையும் நிழற்படப்பிரதியையும் கொண்டுவருதல் வேண்டும். கேள்விமனு ஆனது 15.12.2023 அன்று பி.ப 2.00 மணிக்கு திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியையும் இணைப் பிரதியையும் தனித்தனியாக செயலாளர் கரைத்துறைப்பற்று பிரதேச சபை முல்லைத்தீவு என்னும் முகவரியிட்டு கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் மூலப்பிரதி / இணைப் பிரதி முள்ளியவளை சந்தைக் கடைத்தொகுதி கீழ் தளம் எனத் தெளிவாகக் குறிப்பிட்டு இரு விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறைகளையும் "செயலாளர், கரைத்துறைப்பற்று பிரதேச சபை, தலைமை அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிட்டு இதற்கென தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் வைக்கப் பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 15.12.2023 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் இடுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் 15.12.2023 அன்று பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் பதிவுத்தபால் மூலம் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்விவைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத் திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் முழுத்தொகையையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செயலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

### கேள்வி அட்டவணை

| கடை இலக்கம்/ விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|
| கீழ்த்தள கடைத்தொகுதி | ரூபா. 6,000,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |

**செயலாளர்,**
**கரைத்துறைப்பற்று பிரதேச சபை,**
**தலைமை அலுவலகம், முல்லைத்தீவு.**

**28.11.2023.**

## வாடகைத்தாய் தேவை

குழந்தை இல்லாத தம்பதியினர் வாடகை தாய் மூலம் குழந்தை பெற்று கொள்ள விரும்புகின்றனர். வாடகை தாயாக விரும்புகின்றவர் எம்மை தொடர்பு கொள்ளவும். வயது எல்லை 25 முதல் 35 வரை உங்கள் விபரங்கள் எல்லாம் இரகசியமாக பாதுகாக்கப்படும். **மேலதிக விபரங்களுக்கு**

**சசி : 00447555593074 Whats App மட்டும்**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 . 02 . 1948



உதிர்வு 20 . 10 . 2021


### அமரர் திருமதி பத்திநாதன் சந்திராதேவி

அம்மா!
ஆண்டுகள் நகர்ந்தாலும்
எமைவிட்டு அகலாது உங்கள் அன்பான நினைவு
உங்கள் நினைவுகள் வருகையில்
நாம் நிலைகுலைந்து போகின்றோம்
உங்களை நினைக்காத நாளில்லை
எம்முன் என்றும் நிறைந்துள்ளீர்கள் அம்மா!

**ஈரவிழிகளுடன் உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
"தணிகை" அல்வாய் வடக்கு, அல்வாய்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 10 . 1945



இறப்பு 26 . 11 . 2023

### திரு .ராதா தம்பிப்பிள்ளை

( ஓய்வு பெற்ற மகாராஜா நிறுவன இறக்குமதி முகாமையாளர் )

தொல்புரத்தை பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ( ஓய்வு பெற்ற மகாராஜா நிறுவன இறக்குமதி முகாமையாளர் ) திரு ராதா தம்பிப்பிள்ளை அவர்கள் 26.11.2023 திகதி இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ் சென்றவர்களான திரு. திருமதி தம்பிப்பிள்ளை, பகவதி அவர்களின் அன்புப் புதல்வர் ஆவார். அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், வைதேகி, சியாமளக்கிருஷ்ணண், இலவக்கிருஷ்ணண் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், தீபாவின் அன்புமிகு மாமனாரும், கார்த்திகேயனின் அன்புமிகு பேரனாருமாவார். அன்னார் பாலாகிருஷ்ணண் (கனடா), முத்துகிருஷ்ணன் (ஓமான்), மாயக்கிருஷ்ணண் (கனடா) ராமகிருஷ்ணண் (கனடா), சாந்தினி (சென்னை), ரோகிணி (கொழும்பு) மற்றும் காலம் சென்ற மாயா (கொழும்பு), ஆகியோரின் சகோதரருமாவார். காலம் சென்றவர்களான முருகையா, ராஜேந்திரன் (இலங்கை வங்கி), குமாரசாமி (மூளாய்), மயில்வாகனம் (மக்கள் வங்கி, சுழிபுரம்) மற்றும் ரோசா (பிரான்ஸ்), விஜயக்குமார் (கொழும்பு ), நமச்சி (யாழ்ப்பாணம்) செல்வராணி, இந்திரா, கலா, பத்மா ஆகியோரின் மைத்துனருமாவார். மேனகா, கன்னிகா, கோசலை, கலைவாணண், கலைவாணி, தர்சனா, கீர்த்தனா, அக்ஷயன் ஆகியோரின் தாய்மாமனாருமாவார். சிவம் (கனடா), கோபிக்கிருஷ்ணண் ( H.N.B ) ஆகியோரின் மாமனாரும், அபிராமி, யாதவன், திருமகள், மாதங்கி, மாதுரி, சுதா, கைராசி, விஷ்ணு ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 29.11.2023 புதன்கிழமை காலை 8.30 மணி முதல் பொறளை ஜயரட்ன மலர்ச்சாலையில் ( Elvitigala Mawatha ) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இந்து முறைப்படி கிருகைகள் 10 மணி முதல் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பொறளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல் : பரமேஸ்வரி (கொழும்பு) : +94 772 665 766
சியாமளன் (அவுஸ்திரேலியா) : +61 425 327 625
இலவன் : ( கனடா ) +1 647 382 3082

### பிணையில் விடுதலையானவர் சடலமாக மீட்பு

கிளி, நவ. 28

கிளிநொச்சி மருத்துவமனைக்கு முன்பாக உள்ள ரயில் பாதைக்கருகில் நேற்றுமுன்தினம் இரவு செல்வா நகரைச் சேர்ந்த ஜோன் பிரகாஸ் (வயது-22) என்பவருடைய சடலம் மீட்கப்பட்டது.

விநாயகபுரத்தில் கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி இடம்பெற்ற கொலைச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைதாகி கடந்த மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் இவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

(ஒ-214)

### ரொஷானுக்காக நாம் நிற்போம்

விளையாட்டுத் துறை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ள ரொஷான் ரணசிங்கவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அவருக்காக நாம் முன்நிற்போம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

'மக்கள் ஆணையின்றி ஆட்சிக்கு வந்த தற்போதைய ஜனாதிபதி, நாட்டின் சட்டத்தைக்கூட மீறி விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் பணிகளுக்கு இடையூறு விளைவித்து, ஊழல் நிறைந்த கிரிக்கெட் நிர்வாகத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் பணிகளையும் முடக்கி, அவரை விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவியில் இருந்தும், ஏனைய அமைச்சுப் பதவிகளில் இருந்தும் நீக்க எடுத்த முட்டாள்தனமான முடிவை ஜனநாயகத்தை மதிக்கும் எதிர்க்கட்சி என்ற வகையில் எதிர்ப்பை தெரிவிக்கிறோம்' என்றார்.

(ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் மீது சேறடிக்கும் பதாகை அகற்றியவர் கைது

வவுனியா, நவ. 28

மெய்யான தலைவர்கள் என அரசுடன் இணைந்து செயற்பட்ட சிலரது ஒளிப்படங்களும் இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டனர் எனவும் காணப்பட்ட பாதாகைகளை அகற்ற முற்பட்ட முன்னாள் போராளி செ.அரவிந்தன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், பொலிஸ் பாதுகாப்புடன் பாதாகைகள் மீளவும் வைக்கப்பட்டன.

வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்துக்கு மிக அருகாமையில் தபால் நிலையத்துக்கு முன்பாக இவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவை மக்கள் மத்தியில் குழப்ப நிலையினை ஏற்படுத்தும் என்ற காரணத்தால் போராளிகள் நலன்புரிச்சங்கத்தின் தலைவர் செ.அரவிந்தன் அங்கு சென்று இவற்றை இங்கு யார் வைத்தது? இதனை உடனடியாக அகற்றுமாறு தெரிவித்தார். அங்கிருந்த இருவர் தாங்களே இதனை வைத்ததாகவும் இப்படிச் செய்யுமாறு சிலர் பணித்தமையால் இதனைச் செய்தோம். அதனை விட வேறு எதுவும் தமக்குத் தெரியாது என்று கூறியதுடன், பாதாகைகளையும் அகற்றினர்.

அங்கு வந்த வவுனியா பொலிஸார் முன்னாள் போராளியான அரவிந்தனை அச்சுறுத்தி, கைதுசெய்து அழைத்துச்சென்றனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அரவிந்தன், தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காகவே இந்தப் பாதாகைகள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. இதனை இராணுவமே ஒழுங்கமைத்துள்ளது. இந்த விடயத்தில் தலையிடவேண்டாம் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவின் மேஜர் ஒருவர் வந்து என்னை அச்சுறுத்திச் சென்றதாகவும் தெரிவித்தார்.

அங்கு செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர்களை பொலிஸார் அச்சுறுத்தினர். குழப்பநிலை முடிவுக்கு வந்ததும் போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் இராணுவப் புலனாய்வாளர்கள் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். (ஒ-18-110)

# ஆட்சி கவிழ்ப்பு: வாய்ப்பேயில்லை!

இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு சூழ்ச்சி நடக்கின்றது. ரொஷான் ரணசிங்க அல்ல யார் சென்றாலும் ஆட்சி மாறாது என்று இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த ஆட்சியை சீர்குலைக்க சதி நடக்கின்றது. ஒருவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டால் அதனை நேர்த்தியாக செய்வதற்கு முதுகெலும்பு இருக்கவேண்டும். ஜனாதிபதி மற்றும் அரசுமீது நம்பிக்கை இல்லாவிட்டால் விலகிச் செல்ல வேண்டும். யார் வேண்டுமானாலும் வெளியேறலாம். கணவன், மனைவிக்கிடையில் சந்தேகம் ஏற்பட்டால் ஒரு வீட்டில் வாழமுடியாது. விவாகரத்து பெற வேண்டும். அடுத்த தேர்தல்வரை இந்த அரசு தொடர்ந்து பயணிக்கும் - என்றார். (ஒ-44)

## துயிலும்...

தம் பிள்ளைகளின் தமிழீழ தனியரசுக்காக வித்தாகிப்போன உயிர்களின் பெயர்களைச் சொல்லிச் சொல்லி விம்மி விம்மி அழுத காட்சிகள் அங்கிருப்போரையும் கண்ணீர் சிந்த வைத்தது. மாவீரர்களின் திருவுருவப்படத்துக்கு மாலை அணிவித்து பூக்கள் தூவி சந்தனக் குச்சுக்களை ஏற்றி வைத்து படையல்கள் படைத்து அஞ்சலித்த காட்சிகள் கண்களைக் குளமாக்கின.

நேற்று இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தை மீளவும் நினைவுபடுத்தின. மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்பட்ட துயிலும் இல்லங்கள் அல்லது துயிலும் இல்லங்களுக்கு அருகிலுள்ள பொது இடங்களில் நேற்று மாலையிலிருந்தே மக்கள் அணிதிரளத் தொடங்கினர். மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள், உற்றார்கள், உரித்துடையோர், சமர்களமாடிய சக தோழர்கள் எனப் பலரும் மாவீரர் நாளை நினைவுகூரத் திரண்டனர். துயிலும் இல்லங்களின் ஏற்பாட்டாளர்களே எதிர்பார்க்காதளவுக்கு மக்கள் அணிதிரண்டு, தங்கள் காவல் தெய்வங்களைப் பூசித்தனர்.

துயிலும் இல்லங்களில் நேற்று மாலை 6:05 மணிக்கு நினைவு ஒலி எழுப்பப்பட்டது. சரியாக 6:06 மணிக்கு ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து 6:07 மணிக்கு ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டன. அதன்பின்னர் துயிலும் இல்லப் பாடல் ஒலிக்கவிடப்பட்டது.

அப்போது துயிலும் இல்லங்களில் நிலவிய கனத்த மௌனமும் விம்மல்களும் நெஞ்சைப் பிசைவதாக அமைந்தன. துயிலும் இல்லப் பாடலின் 'எங்கே எங்கே ஒரு தரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்' என்ற வரிகள் இசைக்கப்படும்போது உறவுகளின் கதறல்கள் கண்ணீரை வரவழைத்தன.

தாம் வரித்துக்கொண்ட கொள்கைக்காக - மண்ணுக்காக மாண்டுபோன தமது பிள்ளைகளின் பெயரைச் சொல்லி - அவர்களின் பழைய நினைவுகளைக் கூறி தாய்மார்கள் கதறியழ அதனைப் பார்த்து ஏனையோரும் கண்ணீர் மல்கினர். தங்களின் பிள்ளைச் செல்வங்கள் சிறு வயதில் என்ன வகையான உணவுகளை விரும்பி உண்டார்களோ அந்த உணவு வகைகளை வீட்டிலிருந்து தயாரித்துக் கொண்டு வந்த தாய்மாரும், உறவினர்களும், களமாடிய சக தோழர்களும், தமது பிள்ளைகளின் நினைவாக ஒதுக்கப்பட்ட ஈகச்சுடர் முன்பாக - திருவுருவப் படத்துக்கு முன்னால் படைத்து வைத்து புரண்டு அழுதனர்.

புலிகளின் காலத்தில் தமது பிள்ளைகளின் வித்துடல் புதைக்கப்பட்ட கல்லறை முன்பாக அமர்ந்து அதனைக் கட்டியணைத்து உறவுகள் கதறியழுவார்கள். போரின் பின்னர் கல்லறைகள் சிறிலங்கா அரச படைகளால் நிர்மூலமாக்கப்பட்டமையால், ஈகச்சுடர் ஏற்றுவதற்கான தடிகளே நடப்பட்டிருந்தன. அதில் தமது பிள்ளைகளின் படங்களை வைத்து பெற்றோர் கதறியழுதனர்.

தமிழர் தாயகத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய 8 மாவட்டங்களிலும் உள்ள 31 துயிலும் இல்லங்களில் மாவீரர் நாள் நினைவேந்தப்பட்டது.

(அ-ஒ-5-18-20-27-66-100-110)

## பொலிஸாரின்...

நீதிமன்றத்திலும், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடிப் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்திலும், ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்றையதினம் விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிமன்றங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-66)

## உதயன்...

தடுப்புமற்றும்விசாரணைப்பிரிவினரால் 4 மணி நேரம் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி வெளியான 'உதயன்' பத்திரிகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பாக வெளியான செய்தி தொடர்பாகவே பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் பத்திரிகை ஆசிரியரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தமிழ் மக்களால் மாவீரர் தினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில், 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் கொழும்புக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு நேற்றுக் காலை 9 மணிக்கு அழைக்கப்பட்ட 'உதயன்' பத்திரிகை ஆசிரியரிடம் பிற்பகல் ஒரு மணிவரையில் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் துருவித் துருவி விசாரணைகளை மேற்கொண்டதுடன், வாக்குமூலமும் பதிவு செய்தனர்.

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி வெளியான 'உதயன்' பத்திரிகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாள் தொடர்பான செய்தி, அவரது ஒளிப்படத்துடனும், மறுநாள் நடைபெறவிருந்த மாவீரர் நாள் அஞ்சலிக்கு அழைப்பு விடுக்கும் செய்தி ஒன்றும் வெளியாகியிருந்தன. இவை தொடர்பாகவே பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக ஏற்கனவே யாழ்ப்பாணம் பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஊடகங்களின் கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் ஒரு செயற்பாடாகவே இது நோக்கப்படுகின்றது. (அ-ஒ)

## மாவீரர்...

இச்சம்பவம் இடம்பெற்றது.

திடீரென உள்நுழைந்த பொலிஸார் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு இடையூறு ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் அங்கு அலங்கரிக்கப்பட்ட கொடிகளை அகற்றினர். இதனைக் கண்டித்து நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஈகச்சுடரேற்றுவதற்கு 5 நிமிடமாவது தாருங்கள் எனக் கெஞ்சிக்கேட்டும் நேரம் வழங்காமல் திடீர் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

வழமை போன்று கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் உயிர்நீத்த தமது உறவுகளை நினைவு கூரும் முகமாகவும் ஈகச் சுடரேற்றி நினைவேந்தலை மேற்கொள்ளும் முகமாக குறித்த நேரமான மாலை 6.05 நிமிடம் வரை காத்திருந்தனர்.

இதன்போது கலகம் அடக்கும் பொலிஸாருடன் உள்நுழைந்த பொலிஸ் உயர் அதிகாரிகள் நினைவேந்தல் நடத்துவதற்குத் தடை ஏற்படுத்தியதுடன் அங்கு அலங்கரிக்கப்பட்ட சிவப்பு, மஞ்சள் நிறக் கொடிகளை அகற்றினார்கள். அத்துடன் ஒலிபெருக்கி சாதனங்கள் மற்றும் ஏனைய பொருள்களையும் கைப்பற்றி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

பொலிஸாரின் அடாவடி இடம்பெறும் போது மாவீரர்களின் உறவுகள் ஈகச் சுடரை அச்சத்துடன் விரைவாக ஏற்றி விட்டு அங்கிருந்து விலகிச் சென்றனர்.

இச் சம்பவமானது பிரதேசத்தில் அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத்தியதுடன் மக்களிடையே பதற்றத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

நிகழ்வு நடைபெற்ற பிரதேசத்தில் அதிகளவு பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் இராணுவக் கவச வாகனங்கள் என்பன கைதிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் என்பன முன்னெச்சரிக்கையாக தயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்தன. (அ-ஒ-இ)

## ஐந்தாவது...

பொலிஸார் கைது செய்யும் போது நேரில் கண்ட இளைஞன் உள்ளிட்ட ஐவர் யாழ். நீதிவான் நீதிமன்றில் தோன்றி தமது சாட்சியங்களை நேற்றுப் பதிவு செய்தனர். சாட்சி பதிவுகளை அடுத்து வழக்கை எதிர்வரும் முதலாம் திகதிக்கு ஒத்தி வைத்த நீதிவான், அன்றையதினம் அடையாள அணிவகுப்புக்கும் உத்தரவிட்டார்.

அதேவேளை பாதிக்கப்பட்டவர்கள் நலன்சார்ந்துமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள், வழக்கின் மூன்றாவது சாட்சியத்தின் அடிப்படையில் ஐந்து பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் நால்வரை மாத்திரமே கைது செய்துள்ளனர். ஏன் மற்றையவரை கைது செய்யவில்லை என்று மன்றில் கேள்வி எழுப்பினர். அது தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து மற்றைய நபரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மன்று உத்தரவிட்டது. (அ-ஒ-26)

## விளையாட்டுத்துறை...

கடுமையான உரையொன்றை நிகழ்த்தினார். தன்னை கொலை செய்யக்கூடும் எனவும், இதற்கு ஜனாதிபதியும், சாகல ரத்னாயக்கவும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் ரொஷான் ரணசிங்க குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-44)

## துவாரகா...

யாகியிருந்தன. அந்த அறிவிப்பின்படி, குறிப்பிட்ட நேரத்தில் யூடியூப் காணொலி ஊடாக பிரபாகரன் மகள் துவாரகா எனக் குறிப்பிடப்பட்ட பெண்மணி உரையாற்றியுள்ளார். சுமார் பத்து நிமிடங்கள் வரை இந்தக் காணொலி நீடித்துள்ளது.

இந்த காணொலி குறித்த செய்திகளுக்கு இந்திய ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நடந்ததுதான் பலஸ்தீனத்திலும் நடக்கிறது

## முத்தையா முரளீதரன் கவலை

2009ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்றதுதான் பலஸ்தீனத்தில் இப்போது நடைபெறுகிறது என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரன் தெரிவித்துள்ளார்.
இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவின் பக்க நிகழ்வான கலந்துரையாடலில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது :-
நான் மோசமாக ஒடுக்கப்பட்ட ஒரு சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவன். பலஸ்தீனத்தில் நடைபெறும் விடயங்கள் ஊடகங்களில் காண்பிக்கப்படுகிறது. அதைப் பார்த்து நாங்கள் ஆச்சரியப்படுகிறோம். எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற உயிருக்கு உத்தரவாதமற்ற நிலைதான் தற்போது பலஸ்தீனத்தில் காணப்படுகிறது. நான் கிரிக்கெட் விளையாடத்தொடங்கிய காலத்திலிருந்து 2010ஆம் ஆண்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் வரை இலங்கையிலும் இதே நிலைதான் காணப்பட்டது. யார் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் உயிருக்கு உத்தரவாதமற்ற நிலைதான் காணப்பட்டது- என்றார். (ஒ-6)

# பொலிஸ் அலுவலர் பிரதாபனின் இறுதிச்சடங்கு உணர்வுபூர்வம்!



சந்தேகநபரைத் துரத்திச் சென்றபோது தண்ணீரில் மூழ்கிச் சடலமாக மீட்கப்பட்ட, சாவகச்சேரியைச் சேர்ந்த பொலிஸ் அலுவலரான கிருஷ்ணமூர்த்தி பிரதாபனின் (வயது -26) இறுதிச் சடங்குகள் நேற்றுமுன்தினம் இடம் பெற்றன.
அரச மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் இடம்பெற்றதுடன், இதில் மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நேரடியாகக் கலந்துகொண்டு உயிரிழந்தவரின் உறவுகளுக்கு தனது இரங்கலைத் தெரிவித்தார். (ம-27)

# பிடுங்கப்பட்ட அமைச்சு இருவருக்கு பங்கிடப்பட்டது

கொழும்பு, நவ. 28
நீர்ப்பாசன அமைச்சராக இருந்த பவித்ரா வன்னியாராச்சியும் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த ஹரின் பெர்னாண்டோவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.
இந்த இரு அமைச்சுக்களை வகித்த ரொஷான் ரணசிங்க ஜனாதிபதியால் பதவி நீக்கப்பட்ட சில மணித்தியாலங்களில் புதியவர்கள் அதற்கு நியமிக்கப்பட்டனர். (ஒ-இ)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 33 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: **071 173 3911**
**076 853 5022**
**076 213 7239**

(CS 27104) A-1

# மரண அறிவித்தல்

## நாகரெத்தினம் சௌந்தரம்



தோற்றம் 15.04.1934
மறைவு 25.11.2023

04 ஆம் வட்டாரம் மண்கும்பான் கிழக்கைப் பிறப்பிடமாகவும் 2ஆம் வட்டாரம் வேலணை கிழக்கை வசிப்பிடமாகவும், சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நாகரெத்தினம் சௌந்தரம் 25.11.2023 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சிவகாமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விசாலாட்சியின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகரெத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், குகநாதன், ஞானேஸ்வரி, மஞ்சுளா (பிரான்ஸ்), குகபாலன், நிர்மலாதேவி, சந்திரசேகரன் (ஜெயராஜா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, மகாலிங்கம் மற்றும் சுந்தரமூர்த்தி (பிரான்ஸ்), தமிழ்ச்செல்வி, இராசேந்திரம் ரூபறஞ்சினி (விஜி - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், குமாரசாமி, இராசம்மா, புவனேந்திரன், சின்னத்துரை சிவஞானம், சின்னம்மா, சற்குணாநந்தன் மற்றும் இராசேந்திரம் தையல்நாயகி, நாகராசா, மகேந்திரம், வீரகத்திப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான நவரெத்தினம்மா, பாக்கியம், இராசலிங்கம், யோகம்மா மற்றும் இராசமணி, நேசமலர், காலஞ்சென்ற பண்டா மற்றும் இன்பமணி, காலஞ்சென்றவர்களான சின்னமணி, மேரிலிந்தா, செல்வரெத்தினம் இராஜேஸ்வரி மற்றும் செல்வராசா, விஜயலட்சுமி, பிரபானந்தரூபி, புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சர்மிளி (பிரான்ஸ்), மதிசா (பிரான்ஸ்), துஸ்யந்தி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுதன் மற்றும் சதீஸ் (பிரான்ஸ்), விஜிதா, மதன் (பிரான்ஸ்), ஜெகந்தன், நிதன், றேகா (பிரான்ஸ்), சோபனா (பிரான்ஸ்), லதன் (பிரான்ஸ்), ஆகாஸ் (பிரான்ஸ்), சானுகா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், கிரிஷாந் (பிரான்ஸ்), சஞ்சை (பிரான்ஸ்), யதுசன் (பிரான்ஸ்), விஸ்வா (பிரான்ஸ்), இனியா (பிரான்ஸ்), பவித்திரன் (பிரான்ஸ்), அபினயா (பிரான்ஸ்), அபிஷாளினி பிரிர்த்தி (பிரானஸ்), மவிஷன், அக்ஷிகா, சியாம், நித்திகா (பிரான்ஸ்), அஸ்விகா (பிரான்ஸ்), நித்தீஸ் (பிரான்ஸ்), அபிலாஸ் (பிரான்ஸ்), அக்ஷ்ரா (பிரான்ஸ்), தருண், ஆதிஷ், அனனிகா (பிரான்ஸ்), சயன் (பிரான்ஸ்) சஞ்சனா (பிரான்ஸ்), அகானா (பிரான்ஸ்), லதீஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பூட்டியம் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது வேலணை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
வேலணை.

தகவல்:
குடும்பத்தினர்
நா.குகபாலன்
(மகன் - 077 569 2632)

(cs.27105) (N-1)




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org